# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 24 திங்கட்கிழமை 09.11.2024 கதிர் 75



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# தவறுகளுக்கு எதிரான நடவடிக்கைக்காக நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம்!

## - முன்னாள் அமைச்சர் டளஸ் அழகப்பெரும அறிக்கை -



(கொழும்பு, டிச. 09)

பொருளாதாரத் தவறு செய்பவர்களுக்கு எதிராகத் தற்போதைய ஜனாதிபதியும், அரசாங்கமும் எடுக்கும் நடவடிக்கைகளுக்காக நாங்கள் காத்திருக்கிறோம் என்றும், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் ஷரூபா 720 மில்லியன் பொது நிதியைத் துஷ்பிரயோகம் செய்தமைக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் சுதந்திர மக்கள் காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர், முன்னைய அரசாங்கத்தின் நிதிப் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை குறித்து ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளார். சுதந்திர மக்கள் காங்கிரஸ் வெளி யிட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

கடந்த வருடம் நடத்துவதற்கு உத்தேசக்கப்பட்டு, அறிவிக்கப்பட்ட பின்னர் இரத்துச் செய்யப்பட்ட தேர்தலை நடாத்துவதற்கான உத்தேச செலவு 8 பில்லியன்கள் ஆகும்.

7➤

# காற்று மாசு உச்சம்

கொழும்பு, டிச. 09

நாட்டைச் சுற்றி ஏற்றபட்டுள்ள காலநிலை மாற்றம் மற்றும் நாட்டுக்கு வடக்கு திசையிலிருந்து வரும் காற்றின் தன்மை என்பவற்றின் காரணமாக நாடுமுழுவதும் காற்றின் தரச்சுட்டெண் ஆரோக்கியமற்ற மட்டத்தில்நீடிக்கலாம்எனத்தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் சுற்றுச்சூழல் ஆய்வு பிரிவு அறிவித்துள்ளது.

7➤

# இரவு 10 வரை பாஸ்போர்ட் பெறலாம்!

(கொழும்பு, டிச. 09)

பாஸ்போர்ட் பெற விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், அவற்றை விரைவாக வழங்குவதற்கான நடவடிக்கைகளைக் குடிவரவு, குடியகல்வு திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய ஒருநாள் சேவையின் கீழ் இரவு 10.00 மணி வரை பாஸ்போர்ட் விநியோகிக்கும் நேர எல்லை அதிகரிக்கப்பட்டுள்ளதாக திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புதிய நடைமுறையின் கீழ் வார நாட்களில் இரவு 10 மணி வரை ஒருநாள் சேவையில் பாஸ்போர்ட்டைப்பெற்றுக்கொள்ள முடியும். பாஸ்போர்ட் விநியோகப் பணிகளைத் துரிதமாக முன்னெடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (ஐ - 07)

# "பார் பெமிற்" ஏன் கொடுத்தோம்? விளக்கி அறிக்கை விட்டார் ரணில்!

(கொழும்பு, டிச. 09)

மதுவரித் திணைக்களத்தின் விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு அமைவாகவே அனைத்து மதுபான நிலைய உரிமங்களும் வழங்கப்பட்டுள்ளன என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வழக்கப்பட்ட உரிமங்கள் ஊடாக, குறித்த ஒன்பது மாதங்களில் அரசாங்கம் ஈட்டிய மொத்த வருமானம் ஷரூபா 3.1 பில்லியனுக்கும் அதிகமாகும் எனவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலபகுதியில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் அண்மைக்காலமாகப் பெரும் சர்ச்சை நிலவி வந்தது.

2023 ஆம ஆண்டு ஜனவரி மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் வரையான 09 மாத காலப்பகுதியினுள' வழங்கப்பட்ட மதுபான நிலைய அனுமதிப் பத்திரங்களின் விவரங்கள் கடந்த வாரம் வெளியாகிப் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது.

இதனையடுத்து முன்னாள் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவின் அலுவலகம் மதுபான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டமை ஒன்றை இன்று வெளியிட்டுள்ளது.

அந்த அறிவிப்பில் மேலும் கூறப்பட்டுள்ள தாவது, 2022 வரை மதுபான நிலைய உரிமம் வழங்குவதற்கு அரசாங்கம் பணம் வசூலிக்கவில்லை. அப்போது, நாட்டில் நேரடி வரியை இழக்கும் போக்கு காணப்பட்டது.

அந்த நேரத்தில், நாடு மிகக் கடுமையான பொருளாதார திவால் நிலையில் இருந்து விடுபட உரிய நடவடிக்கை எடுக்குமாறு, வழிகள் மற்றும் வழிமுறைகளுக்கான நாடாளுமன்றக் குழுவும் அரசுக்குத் தெரிவித்தது. அதன்படி, உடனடி நேரடி வரி இழப்புக்கு

7➤

# அர்சுனாவுக்கு எதிராக முறைப்பாடு!

(யாழ்ப்பாணம், டிச 09)

நாடாளுமன்ற உறுப்பினர், மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையினுள் அத்துமீறி உள்நுழைந்து தமது கடமைக்கு இடையூறு விளைவித்ததாகவும், தம்மை நாடாளுமன்ற உறுப்பினர் இ. அர்ச்சுனா அச்சுறுத்தி உள்ளதாகவும்வைத்தியசாலையின் பணிப்பாளர், மருத்து வர் தங்கமுத்து சத்திய மூர்த்தியினால் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தாம் விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதாக யாழ்ப்பாணம் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஐ



கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் செயலாளராக சட்டத்தரணி எம்.ஏ.எல்.எஸ்.மந்திரிநாயக்க ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார். இன்று காலை , ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஜனாதிபதி செயலகத்தில் வைத்து இவருக்கான நியமனக் கடிதத்தை வழங்கினார். (ஐ)

# தேர்தல் செலவு விவரங்களை 1000 பேர் கையளிக்கவில்லை

*கொழும்பு, டிச. 09*

*நடைபெற்று முடிந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டவர்களில் கிட்டத்தட்ட ஆயிரம் பேர் தமது தேர்தல் செலவீனங்கள் குறித்த வரவு செலவு அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தவறியுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.*

*இது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு இன்று வெளியிட்டுள்ள ஊடக அறிவித்தலின்படி, தேர்தலில் போட்டியிட்ட 8 ஆயிரத்து 361 வேட்பாளர்களில் 7 ஆயிரத்து 412 பேர் தமது வரவு - செலவு குறித்த அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளனர்.*

*பல்வேறு சுயேச்சைக்குழுக்களிலும் போட்டியிட்ட 690 பேரில் 493 பேரும், தேசியப் பட்டியல்களினூடாகப் பெயரிடப்பட்ட 527 பேரில் 434 பேரும் மட்டுமே வரவு - செலவு குறித்த அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளனர் என்றும் அந்த ஊடக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)*

# ஹாட்லி அதிபர் கலைச்செல்வனுக்கு பழைய மாணவர் பணி எழில் விழா!

பருத்தித்துறை , டிச. 09

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் தம்பையா கலைச்செல்வனின் பணி எழில் விழா எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை, காலை 09.00 மணிக்கு பருத்தித்துறை சூரியமஹால்மண்டபத்தில்நடைபெறவுள்ளது.

ஓய்வுநிலை அதிபர்த.கலைச்செல்வனிடம் கற்ற மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கியற்றுறை சிரேஷ்ட பேராசிரியர் பா. நிமலதாசன்தலைமையில்நடைபெறவுள்ளது.

1994 ஆம் ஆண்டு முதல் ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய த.கலைச்செல்வன் 2021 ஆம் ஆண்டு முதல் அதிபராகப் பொறுப்பேற்று, கல்லூரியின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க ஒருவராக மிளிர்ந்து எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார். .

இவர், ஆசிரியராக, பகுதித் தலைவராக, அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் கல்லூரி மாணவர்களிடையே நற்பண்புகளை வளர்ப்பதிலும், கல்லூரியின் நற்பெயரைக் கட்டிக்காப்திலும் அரும் பங்காற்றியவர். குறிப்பாக கல்லூரி கல்வி, விளையாட்டு மற்றும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் தொடர்ந்தும் முன்னிலை வகித்தமைக்கு இவரது பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.




*கிளிநொச்சி பிராந்திய பொலிஸ் அத்தியட்சகராக இடமாற்றம் பெற்று வந்துள்ள பொலிஸ் அத்தியட்சகர் சிசிர பெத்திர தந்திரி இரணைமடுவில் உள்ள பிராந்தியப் பொலிஸ் தலைமையகத்தில் இன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (ஐ-113)*

## கடற்படைக்கு வயது 74

(கொழும்பு, டிச. 09)

இலங்கைக் கடற்படை இன்றுதனது74ஆவதுஆண்டு நிறைவைக்கொண்டாடுகிறது. ஆண்டு நிறைவையொட்டி நாடெங்கிலுமுள்ள கடற்படைத் தளங்கிளில் சமய அனுட்டானங்கள் உட்படப் பல்வேறு நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவின் பரிந்துரையின் அடிப்படையில், கடற்படையின் 74 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கடற்படையில் பணியாற்றும் சிரேஷ்ட மற்றும் கனிஸ்ட அதிகாரிகள் 2 ஆயிரத்து 138 பேருக்கு இன்று முதல்பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## நியமனம்



கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் செயலாளராக ஜே.எஸ்.அருள்ராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகரவினால் திருகோணமலையில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் இன்று இந்த நியமனம் வழங்கப்பட்டது.

ஜெ. எஸ். அருள்ராஜ் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளராகவும், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும், பிரதேச செயலாளராகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# மின்சார சபை ஊழியர்களுக்கு இம்முறையும் போனஸ் இல்லை

## - பணிப்பாளர் சபை தீர்மானம் -

(கொழும்பு, டிச. 09)

இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு வருடாந்த போனஸ் வழங்குமாறு தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்த இலங்கை மின்சார ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்திருந்த போதிலும், தற்சமயம் அவ்வாறான கொடுப்பனவை வழங்காமல் இருப்பதற்கு இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது.

இலங்கை மின்சார சபை இவ்வருடம் பாரிய இலாபத்தை ஈட்டிய போதிலும், கடன் மீளச் செலுத்துவதற்கும் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கும் இந்தப் பணம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை மின்சார சபை இலாபகரமான நிலையை அடைந்துள்ள நிலையில், ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவை டிசம்பர் 10ஆம் திகதிக்கு முன்னர் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மின்சார சபைத் தலைவரிடம் இலங்கை மின்சார ஊழியர் சங்கம் அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தது.

மின்சார சபை ஊழியர்களுக்கு கடந்த அரசாங்கத்தின் கீழ் இரண்டு வருடங்களாக மேலதிக கொடுப்பனவு கிடைக்காவிட்டாலும், அவர்களின் தொழிற்சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கம் ஆட்சிக்கு வந்துள்ளதால் ஊழியர்களுக்கு நிச்சயமாக மேலதிக கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என அந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபை இவ்வருடம் பாரிய இலாபத்தை ஈட்டிய போதிலும் பெற்றோலிய சட்டக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு கடனை திருப்பி செலுத்துவதற்காக ஷரூபா 112 பில்லியனை செலவிட்டுள்ளது.

அத்துடன், 2024ஆம் ஆண்டு மின்சார சபைக்கு கிடைத்த இலாபத்தில் மிகுதியான ஷரூபா 41 பில்லியன் இந்த ஆண்டு மின் கட்டணத்தைக் குறைப்பதற்கு பயன்படுத்தப்பட்டதாக இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு போனஸ் வழங்க முடியாது என இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தனுஷ்க பராக்கிரமசிங்க உறுதிப்படுத்தினார்.

(ஐ-05)

# பரீட்சைக் கொடுப்பனவுகளை உறுதி செய்யக் கோரிக்கை!

கொழும்பு, டிச 09

பரீட்சை கடமைகளில் ஈடுபட்டுள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டிய கொடுப்பனவுகளை முறையாக வழங்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பரீட்சை ஆணையாளரினால் நேற்று வெளியிடப்பட்ட சுற்றறிக்கையினால் போக்குவரத்து கொடுப்பனவுகள் தொடர்பில் குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"இந்த நாட்களில் உயர்தரப் பரீட்சைகள் நடைபெறுகின்றன. பரீட்சை ஆணையாளரினால் வழங்கப்பட்ட இரண்டு கடிதங்களால் பரீட்சை ஊழியர்களுக்கு புதிதாக சிக்கல் எழுந்துள்ளது. நவம்பர் மாதம் 1ஆம் திகதி முதலாவது கடிதம் வழங்கப்பட்டது. அந்த கடிதத்தின்படி, பரீட்சை மண்டபத்தில் இருந்து பயணிக்கும் தூரம் 10 கிலோமீற்றருக்கு அதிகமாக இருந்தால் 1000 ரூபா செலுத்த முடிவு செய்யப்பட்டது. டிசம்பர் மாதம் 8ஆம் திகதி பரீட்சை ஆணையாளரால் மற்றொரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதன்படி 1000 ரூபாவாக இருந்த போக்குவரத்து கொடுப்பனவு 500 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும், 5 முதல் 10 கிலோமீற்றர் இடைப்பட்ட தூரத்திற்காக 750 ரூபா முன்னதாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது தற்போது 400 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும், 2 முதல் 5 கிலோமீற்றருக்க 500 ரூபாவாக இருந்த நிலையில், தற்போது அது 300 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், 2 கிலோமீற்றருக்கு குறைவாக இருந்தால் 300 ரூபா வழங்குவதாகவும், அது தற்போது 200 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. அத்தோடு பரீட்சை கண்காணிப்பாளருக்கும் கொடுப்பனவு வழங்க வேண்டுமென கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், தற்போது புதிய கடிதமொன்று வெளியிடப்பட்டு இவ்வாறு கொடுப்பனவு குறைக்கப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் அனைவரும் குழப்பத்தில் இருக்கின்றனர்" என்றார்.

# உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான ஆலோசனைக்காக சட்டமா அதிபரை நாடும் ஆணைக்குழு !

கொழும்பு, டிச 09

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்துவது தொடர்பில், தேர்தல்கள் ஆணைக்குழு சட்ட மாஅதிபரின் ஆலோசனையை நாடியுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதில் ஏதேனும் சட்டத் தடைகள் இருப்பின், அது தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதே இதன் நோக்கமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்தார்.

பழைய வேட்பு மனுப் பட்டியல் இரத்து செய்யப்பட்டால், நாடாளுமன்றத்தில் சட்டமூலம் நிறைவேற்றப்பட வேண்டுமென, தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் தொடர்பாக ஏற்கனவே கோரப்பட்டுள்ள பழைய வேட்பு மனுப் பட்டியலை இரத்து செய்ய அமைச்சரவை அண்மையில் தீர்மானித்தது. அந்த முடிவை அரசாங்கம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கடந்த வாரம் அதிகாரப்பூர்வமாக அறிவித்திருந்தது.

இதேவேளை, உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்காகக் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 340 உள்ளூராட்சி சபைகளுக்கு 8 ஆயிரத்து 711 வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக வேட்புமனுக்கள் கோரப்பட்டன. அதன்படி, 80 ஆயிரத்து 672 வேட்பாளர்கள் அத்தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 275 உள்ளூராட்சி சபைகளுக்கு இவர்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்தவர்களில் சுமார் மூவாயிரம் அரச ஊழியர்கள் உள்ளனர். வேட்புமனு தாக்கல் செய்தவர்களில் சுமார் எட்டாயிரம் பேர் வெளிநாடு சென்றுள்ளனர் அல்லது உயிரிழந்துள்ளனர் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

(ஐ-05)

## தெங்கு செய்கையை மேம்படுத்த வழிகாட்டல் கையேடு வெளியீடு!



கொழும்பு, டிச. 09

இலங்கையில் தென்னை உற்பத்தி மற்றும் கைத்தொழில் துறையை மேம்படுத்தும் வகையில், இலங்கையின் விவசாய வணிகத் துறையில் முக்கிய பங்கு வகிக்கும் சி.பி.எல் குழுமத்தின் துணை நிறுவனமான குளோபல் பூஃட் நிறுவனமும் சர்வதேச அபிவிருத்திக்கான யூ.எஸ் எயிட் நிறுவனமும் இணைந்து தென்னைச் செய்கை தொடர்பான சிறந்த நடைமுறைகள் பற்றிய விரிவான கையேடு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

யூ.எஸ் எயிட் நிறுவனத்தின் தனியார் துறை மேம்பாட்டு செயற்பாட்டின் உணவுத் தீர்வுகள் திட்டத்தின் கீழ் அனுசரணை வழங்கப்பட்டுள்ள இந்த முயற்சியானது, தேங்காய் உற்பத்தித்திறன் தொடர்பான சவால்களை எதிர்கொள்வதையும், விவசாய சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலமும் விவசாயிகளுக்குச் சந்தைக்கான அணுகலை மேம்படுத்துவதன் மூலமும் விநியோக இடைவெளியைக் குறைப்பதும் இந்த திட்டத்தின் குறிக்கோள்களில் ஒன்றாகும்.

இலங்கையின் தெங்கு உற்பத்தித் துறையானது, வருடாந்தம் மூவாயிரம் மில்லியன் தேங்காய்களை உற்பத்தி செய்கிறது. இது, 4 ஆயிரத்து 500 தேங்காய்கள் எனும் உள்நாட்டுத் தேவை மற்றும் ஏற்றுமதிக்கான எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான மில்லியனுக்கும் குறைவாகவே உள்ளது.

குறைந்த கருக்கட்டல், நீர் விநியோகம், பீடைகளின் கட்டுப்பாடு போன்ற சிக்கல்களை எதிர்த்துப் போராடுவதற்கான மேம்பட்ட விவசாய நுட்பங்களை இந்த கையேடு உள்ளடக்கியுள்ளது. மூன்று வருடங்களுக்குள் வருடாந்தம் ஒரு மரத்தில் குறைந்தது 100 தேங்காய்களை விவசாயிகள் விளைச்சலாக பெற உதவுவதே இதன் பிரதான இலக்காகும்.

மேலும், இலங்கையின் தெங்குத் தொழில்துறையின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை வழிநடத்தும் வகையில், அதன் அடித்தளத்தை உருவாக்கும் விவசாயிகளை வலுவூட்டுவதையும் விவசாயிகளின் அறிவையும் உற்பத்தி திறன்களையும் மேம்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள தெரிவு செய்யப்பட்ட 250 சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு முதற்கட்டமாக இந்த கையேடு வழங்கப்படவுள்ளது.

(ஐ-77)



## மத்திய ஆபிரிக்கா அமைதிப் பணிக்காக இலங்கை விமானப்படையினர் பயணம்!

கொழும்பு, டிச. 09

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் படையில் பணியாற்றுவதற்காக இலங்கை விமானப் படையின் 10ஆவது படையணி மத்திய ஆபிரிக்கக் குடியரசுக்குப் பயணமாகியுள்ளது.

விமானப்படையின்10 ஆவது படையணி சேர்ந்த 20 அதிகாரிகளும், 88 விமானப் படையினருமாக 108 பேர் அடங்கிய குழுவே கடந்த வாரம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ஆபிரிக்கக் குடியரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விமானப்படை தெரிவித்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு டிசெம்பர் 04 ஆம் திகதி முதல் ஓராண்டு காலத்துக்கு அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டிருந்த விமானப்படையின் 09 ஆவது படையணி சேர்ந்த 92 பேர் கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைக்குக் திரும்பி வந்துள்ளனர்.

அவர்களின் பணியைத் தொடர்ந்து செய்வதற்காக விமானப்படையின் 10 ஆவது படையணி சேர்ந்த 108 பேர் அனுப்பப்பட்டுள்ளதாகவும், இதுவரையான ஒருவருட காலத்தில் சுமார் ஆயிரத்து 219 பறப்பு மணித்தியாலங்கள், படையினருக்கான சம்பளம் மற்றும் ஆயுதங்கள், உபகரணங்களுக்கான வாடகை உட்பட கணிசமான வருமானம் நாட்டுக்குக் கிடைத்துள்ளதாகவும் விமானப்படை மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-05)

## எம்.பியின் ஜீப் மோதி பெண் ஒருவர் பலி கைது செய்யப்பட்ட சாரதிக்குப் பிணை!

வென்னப்புவ, டிச.09

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பயணித்த ஜீப் வண்டி, மோதியதில் பெண் பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளார். கொழும்பு - புத்தளம் வீதியில் பொலவத்தை சந்திப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் யாசகம் செய்யும் 70 வயதுடைய பெண் ஒருவரே உயிரிழந்துள்ளதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு -புத்தளம் வீதியில், பொலவத்தை சந்தியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் படுகாயமடைந்த பெண், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரின் சாரதியான கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வென்னப்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ-77)

## சனத்தொகைக் கணக்கெடுப்புக்கு ஒத்துழையுங்கள் திணைக்களப் பணிப்பாளர் மக்களிடம் கோரிக்கை

கொழும்பு, டிச.09

சனத்தொகைக்கணக்கெடுப்புப்பணிகளுக்காக வீடுகளுக்கு வரும் கணக்கெடுப்பாளர்களுக்கு தேவையான தகவல்களை வழங்குவதில் அச்சம் கொள்ளத் தேவையில்லை என சனத்தொகை கணக்கெடுப்புமற்றும்புள்ளிவிபரத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்திற்கான சனத்தொகக் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சனத்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனோஜா செனவிரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

சனத்தொகை கணக்கெடுப்புக்கு வரும் அதிகாரிகளுக்கு சில வீடுகளில் அச்சம் காரணமாகத் தகவல்கள் வழங்கப்படுவதில்லை. பொதுமக்கள் கணக்கெடுப்பில் ஈடுபடுபவர்களைச் சந்தேகத்தோடு நோக்குவதனால் தகவல்களை வழங்கப்பின்னடிக்கிறார்கள் என்று தங்களுக்குத் தெரிவக்கப்பட்டுள்ளதாகவும், சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனோஜா செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

எது எப்படியிருப்பினும், சனத்தொகைக் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் எதிர்வரும் டிசம்பர் 23ஆம் திகதி நிறைவடையும் என்று எதிர்பார்ப்பதாக பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

(ஐ-09)

# ரஷ்யா பயணம் மேற்கொள்ளும் மத்திய மந்திரி ராஜ்நாத் சிங்!



இந்திய பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங் மூன்று நாள் சுற்றுப் பயணமாக ரஷ்யா சென்றுள்ளார். இந்நிலையில் நேற்று இரவு ரஷ்யா தலைநகர் மாஸ்கோவுக்கு சென்ற ராஜ்நாத் சிங்கை இந்திய ரஷ்ய தூதர் வினய்குமார் மற்றும் ரஷ்ய துணை பாதுகாப்பு அமைச்சர் அலெக்சாண்டர் போமின் வரவேற்றனர்.

இதனையடுத்து ரஷ்யாவில் தயாரிக்கப் பட்ட ஐ.என்.எஸ். துஷில் போர் கப்பல் இன்று கலினியின் கிராட்டில் உள்ள யந்த்ரா கப்பல் கட்டும் தளத்தில் இந்திய கடற்படையுடன் சேர்க்கப்படும் விழா நடக்கிறது.

இதில் மத்திய மந்திரி ராஜ்நாத்சிங், கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதி கலந்து கொள்கின்றனர். மல்டி ரோல் ஸ்டெல்த்-கைடட் ஏவுகனை பேர் கப்பல் உலகளவில் மிகவும் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட பேர் கப்பல்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

இது இந்தியப் பெருங்கடலில் இந்திய கடற்படையின் செயல்பாட்டு திறனை கணிசமாக உயர்த்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை நாளை (செவ்வாய்க் கிழமை) மாஸ்கோவில் ராணுவம் மற்றும் ராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான இந்தியா-ரஷ்யா அரசுகளுக்கு இடையேயான 21-வது கூட்டம் நடக்கவிருக்கின்றது. இதில் மத்திய மந்திரி ராஜ்நாத் சிங்கும், ரஷ்ய பிரதிநிதியான ஆண்ட்ராய் பிளசோவ் இணைந்து தலைமை தாங்குகின்றனர்.

இதில் இருநாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு துறையில் ராணுவம் மற்றும் தொழில்துறை ஒத்துழைப்பு உட்பட பலத்தரப்பட்ட உறவுகள் குறித்து ஆலோசனை நடக்கிறது.

உலகளாவிய பிரச்சனைகள் குறித்தும் கருத்துக்களை பரிமாறிக் கொள்கிறார்கள்.

இதைத்தொடர்ந்து மத்திய மந்திரி ராஜ்நாத் சிங் ரஷ்ய அதிபர் புதினை சந்திப்பார் என்று இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. ஆனால் இந்த சந்திப்பு நடைபெறும் நாள், இடம் பற்றிய விவரம் எதுவும் இதுவரை அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சோனியா காந்தியின் பிறந்தநாளை முன்னிட்டு வாழ்த்து தெரிவித்த பிரதமர் மோடி!



காங்கிரஸ் மூத்த தலைவரான சோனியா காந்தி மேல் சபை எம்.பி.யாக உள்ளார். இன்று அவர் தனது 78-வது பிறந்தநாளை கொண்டாடினார்.

இந்நிலையில் பிறந்தநாளை முன்னிட்டு சோனியா காந்திக்கு பிரதமர் நரேந்திரமோடி தனது எக்ஸ்தளத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் சோனியா காந்திக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள். அவர் நல்ல உடல் ஆரோக்கியத்துக்கும் நீண்ட ஆயுளுக்கும் பிரார்த்தனை செய்கிறேன் என அதில் கூறப்பட்டுள்ளது.




## டெல்லியில் பள்ளிகளுக்கு விடுக்கப்பட்ட வெடிகுண்டு மிரட்டலால் ஏற்பட்ட பரபரப்பு!

டெல்லியில் உள்ள 2 பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதால் சற்று பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

டெல்லி ஆர்.கே.புரம், பஸ்ஷிம் விஹார் பகுதியில் உள்ள பள்ளிக்கு மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளதையடுத்து வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்கள் சோதனை நடத்தி வருகின்றனர்.

தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட அதேவேளை பொலிஸாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

வெடிகுண்டு மிரட்டலையடுத்து, பள்ளி நிர்வாகத்தினர் மாணவர்களை வீட்டிற்கு திருப்பி அனுப்பியுள்ளனர்.

இரண்டு பள்ளிகளிலும் சோதனை நடந்து வருகிறது, சந்தேகத்திற்குரிய எதுவும் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## சபரிமலை பக்தர்களின் கோரிக்கையை நிறைவேற்றிய நிர்வாகம் பெண்கள் தங்குவதற்கு மும்பையில் சிறப்பு மையம்



சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு ஒவ்வொரு ஆண்டும் மண்டல மற் றும் மகரவிளக்கு பூசை காலத்தில் இலட சக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்ய வருகை தருவார்கள்.

இந்த ஆண்டுக்கான மண்டல பூசை தற்போது நடந்து வரும் நிலையில் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அங்கு செல்கிறார்கள்.

சபரிமலைக்கு 10 வயதுக்கு மேற்பட்ட மற்றும் 50 வயதுக்கு குறைந்த பெண்கள் செல்ல முடியாது. 50 வயதுக்கு மேற்பட்ட பெண்களே சபரிமலைக்கு செல்ல முடியும். இதனால் வெளிமாநிலங்களில் இருந்து ஐயப்ப பக்தர்களுடன் வரக்கூடிய பெண்கள், தங்கும் வகையில் தங்குமிடம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக இருந்து வந்தது. பெண்களுக்கு பாதுகாப்பான ஓய்வு மையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை பொலிஸாரும் முன்வைத்திருந்தனர்.

இதையடுத்து பம்பையில் பெண்களுக்கான ஓய்வு மையம் அமைக்க தேவசம்போர்டு நடவடிக்கை எடுத்தது.

அதன்படி ஐயப்ப பக்தர்களுடன் வரக்கூடிய பெண்கள் தங்குவதற்காக சிறப்பு மையம் மும்பை கணபதி கோவில் அருகே அமைக்கப்பட்டது. இதன் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்த விழாவில் பம்பை தனி அலுவலர் ஜெயசங்கர் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

1000 சதுரஅடி பரப்பளவில் குளிர்சாதன வசதியுடன் கூடிய இந்த மையத்தில் ஒரே நேரத்தில் 50 பெண்கள் தங்கலாம்.

சபரிமலைக்கு செல்லும் ஐயப்ப பக்தர்களுடன் வந்திருக்கும் குறைந்த வயது பெண்கள் இந்த மையத்தில் வசதியாகவும், பாதுகாப்பாகவும் ஓய்வெடுக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபரிமலைக்கு வரக் கூடிய குழந்தைகளின் தாய்மார்களும் இந்த வசதியை பயன்படுத்திக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தில் ஓய்வு அறை, உணவளிக்கும் அறை மற்றும் கழிப்பறை உள்ளிட்டவைகள் இடம்பெற்றுள்ளன.

## வங்கதேசத்தில் தொடரும் பதட்டம் இந்து துறவி, சீடர்கள் மீது வழக்கு!

வங்கதேச பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா கடந்த ஆகஸ்ட் 5-ந் தேதி, பதவி விலகியதில் இருந்து அங்குள்ள இந்துக்களுக்களுக்கு எதிராக தொடர் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதைக் கண்டித்து வங்கதேச சனாதானி விழிப்புணர்வு இயக்கம் சார்பில் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்த இயக்கத்தின் செய்தித் தொடர்பாளராக இருந்த துறவி சின்மோய் கிருஷ்ண தாஸ் மீது தேச துரோக வழக்கு பதிவு செய்யப்பட்டு கடந்த நவம்பர் 25-ந் தேதி டாக்கா சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் சின்மோய் கிருஷ்ண தாஸ் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது நடந்த வன்முறையில் வழக்கறிஞர் ஒருவர் கொல்லப்பட்டார். இதையடுத்து, சின்மோய் கிருஷ்ண தாஸ்/க்கு ஆதரவாக நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் ஆஜராக வழக்கறிஞர்கள் சங்கம் தடை விதித்தது.


இந்த வழக்கில் சின்மோய் கிருஷ்ண தாஸ் ஜாமீன் மனு மீதான விசாரணையை நீதிமன்றம் வருகிற ஜனவரி 2ஆம் தேதிக்கு ஒத்திவைத்தது.

இந்த நிலையில் சிட்டகாங் மெட்ரோபாலிடன் கோர்ட்டில் மாஜிஸ்திரேட் எம்.டி அபு பக்கரிடம் தொழிலதிபரும், பங்களாதேஷின் ஹெபாசாத்-இ-இஸ்லாம் அமைப்பின் ஆர்வலருமான எனாமுல் ஹக் என்பவர் புகார் அளித்துள்ளார். அதில், நவம்பர் 26-ந் தேதி நீதிமன்றத்தில் நிலப் பதிவேடு பணியை முடித்துவிட்டு வீடு திரும்பியபோது சின்மோய் கிருஷ்ண தாஸின் ஆதரவாளர்கள் தன்னைத் தாக்கியதாக புகாரில் கூறியுள்ளார்.

தாக்குதலின் காரணமாக நீண்ட காலமாக சிகிச்சையில் இருந்தமையால் வழக்குத் தாக்கல் செய்வதில் தாமதம் ஏற்பட்டதாகவும் ஹக் கூறினார்.

இதைத்தொடர்ந்து கிருஷ்ணதாஸ் மற்றும் அவரது சீடர்கள் 164 பேர் மற்றும் அடையாளம் தெரியாத 500 பேர் மீது மேலும் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதனால் தொடர்ந்து பதட்டம் நிலவும் சூழ்நிலையில் இதுபோன்ற நடவடிக்கைகளால் இந்தியா மற்றும் வங்கதேசம் இடையேயான உறவிலும் பாதிப்பு ஏற்பட்டு உள்ளது.



# மனிதகுலத்துக்கு சவால்விடும் செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.)

அறிவியல் தொழில் நுட்பத்தின் அதிதீவிர வளர்ச்சியால், சமீப காலமாக ஊடகம் மற்றும் செய்தித்தாள்களில் அதிகமாக பேசப்பட்டு வரும் தொழில் நுட்பம் தான், ஏ.ஐ. 'ஆர்டிபிஷியல் இன்டெலிஜென்ஸ்' எனப்படும், செயற்கை நுண்ணறிவு அல்லது செயற்கை அறிதிறன்.

மனிதனை போலவே அல்லது மனிதனை விட அதிகமாக சிந்திக்கும் திறன் கொண்ட மென்பொருளால் தானியங்கி இயந்திரங்களை உருவாக்க தொழிற்சாலை, கல்வி, மருத்துவம், விஞ்ஞானம், பாதுகாப்பு மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் ஆகிய பல்வேறு துறைகளில் செயற்கை நுண்ணறிவு பயன்படுகிறது.

கடந்த, 1956 இல் வெறும் பாடமாக இருந்த செயற்கை நுண்ணறிவு, 2012 இல் ஆழமான கற்றல் தொழில் நுட்பமாகவும், 2017 மற்றும் 2020 களில், பல்வேறு கட்ட ஆராய்ச்சிக்குப்பின், பலதரப்பட்ட பயன்பாட்டிற்கு உதவும் வகையில் உருவெடுத்தது.

பல்வேறு பயன்பாட்டில் இருக்கும் சிக்கல்களை தீர்க்க, செயற்கை நரம்பியல், பொருளியல் புள்ளியியல், நிகழ்தகவு, உளவியல், கணிதம் ஆகிய முறைகளை ஒருங்கிணைத்து ஏ.ஐ., மென்பொருள் உருவாக்கப்படுகிறது.

இணைய வணிகத்தில், வாடிக்கையாளர்களின் விருப்பம், தேவைக்கேற்ப பொருட்களை பரிந்துரை செய்யவும், கடன் அட்டை மற்றும் போலி விமர்சனம் தொடர்பான சிக்கல்களை தீர்க்கவும், ஏ.ஐ., தொழில்நுட்பம் பயன்படுகிறது.

கல்வித்துறையில் ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்த, கற்பித்தல் அல்லாத பிற வேலைகளான மாணவர்களின் தேர்ச்சி, தனிப்பட்ட விபரங்களை சேகரித்தல், ஆசிரியர் பெற்றோர் சந்திப்பு, தேர்வுத்தாள் திருத்தம், பாடங்களின் விபரம் ஆகிய, பல்வேறு தகவல்களை, ஏ.ஐ., மூலமாக மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பரிமாறிக் கொள்ள உதவுகிறது.

வீடியோ மற்றும் குரல் பதிவுகளை எழுத்து வடிவமாக மாற்றவும், குரல் உதவி மூலமாக நாம் ஐயங்களை கேட்டு தெளிவு பெறவும், கற்கவும், வாகனங்களில் விபத்துக்களை தடுக்கவும், பாதுகாப்பு துறையில் கண், கைரேகை, முகத்தை வைத்து நபரின் அடையாளம் காணவும் செயற்கை நுண்ணறிவு உதவுகிறது.

மருத்துவ துறையில், முன்கூட்டியே நோயின் தாக்கத்தை கண்டறிதல், அதி நவீன ஏ.ஐ., தொழில் நுட்பம் சார்ந்த கருவிகளை பயன்படுத்தி நோய்களைக் குணப்படுத்துதல், புதிய மருந்துகளை கண்டுபிடித்தல் ஆகியவை, தற்காலத்தில் இன்றியமையாதது.


தானியங்கி மோட்டார் விற்பனைத்துறை, விளையாட்டுத்துறை, ஊடகத் துறை, வணிகம், வானியல் தரவு அறிவியல் மற்றும் பாதுகாப்பு, போக்குவரத்து ஆகியவற்றிலும், ஏ.ஐ., தொழில்நுட்பம் பயன்களை செய்து வருகிறது.

### சமீபத்திய ஏ.ஐ., பயன்பாடுகளில்

யோகா மேட் குறிப்பிடத்தக்கது. இதில் உள்ள சென்சார்கள், பயனாளிகள் செய்யும் யோகா பயிற்சியின் அடிப்படையில், அவர்கள் செய்யும் தவறுகளை சுட்டிக்காட்டும் எவ்வாறு பயிற்சி செய்ய வேண்டும் என்பதையும் கற்றுத்தரும்.

பெண்களுக்கு, ஏ.ஐ., தொழில்நுட்ப உதவியுடன், மார்பக புற்று நோய் பரிசோதனை நடத்தப்படுகிறது.

ஒன்பது மொழிகளில் செயல்படும், ஏ.ஐ., செயலியான, 'ஜெமினி ஏ.ஐ.,'யை, கூகுள் நிறுவனம் அறிமுகப்படுத்தி உள்ளது. இதில், தமிழும் அடங்கும். இந்த செயலி கணிதம், இயற்பியல், வரலாறு, மருத்துவம் என, 57



வகையான பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களுக்கான தீர்வை வழங்குகிறது.

இந்தியாவின் அஸாம் மாநிலதில் உள்ள தனியார் பள்ளி, 'ஐரிஸ்' எனப்படும், ரோபோ ஆசிரியை ஒருவரை அறிமுகம் செய்துள்ளது. இது, குரல் மூலமாக மாணவர்களின் சந்தேகங்களுக்கு விடையளிக்கும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.

இத்தனை அளப்பரிய பயன்பாட்டிற்கு, ஏ.ஐ., உதவினாலும், உலகமெங்கும் மனித குலத்துக்கு தீங்கு விளைவிக்கும் ஆபத்தான விளைவுகளும், அன்றாடம் அரங்கேறி வருகின்றன.

ஏ.ஐ., 'டீப் பேக்' உக்தியை பயன்படுத்தி, பிரபலங்களின் முகத்தை வேறு நபர்களின் உடலுடன் பொருத்தி, வீடியோ மற்றும் புகைப்படங்கள் வெளியாகிறது.

ஹோங்காங்கின் பிரபல நிதி பிரிவில் போலியான ஆன்லைன் சந்திப்பு நடத்தி, 207 கோடி ஷரூபா, போலி வங்கி கணக்குக்குக் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

உலகெங்கிலும் நடைபெறும் தேர்தல்களில், செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி, சமூக வலைத்தளங்களில் பிரசாரங்களின் மூலமாக வாக்காளர்கள் முடிவு எடுப்பதில் தாக்கத்தை ஏற்படுத்த, உலகின் மிகப்பெரிய சக்தியாக மாற, சீனா ஈடுபட்டுள்ளதை, மைக்ரோசொப்ட் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஏ.ஐ., தொழில்நுட்பதில் இயங்கும் தானியங்கி வாகனங்கள், தீவிரவாதத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

உறவினர்கள் போல், ஏ.ஐ., குளோனிங் குரல் மற்றும் வீடியோவை பயன்படுத்தி அழுது பணம் பறித்தல், ஏ.ஐ., செயல்பாட்டால் பெரும்பாலானோர் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மேலும் செயற்கை நுண்ணறிவால் எதிர்காலத்தில் பாரிய குற்றங்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது

ஓடியோ – வீடியோ ஆள் மாறாட்டம், ஓட்டுநர் இல்லாத வாகனங்களை ஆயுதங்களாகப் பயன்படுத்துதல், தகவல் தொடர்பு சாதனங்களில், ஏ.ஐ., பிஷிங் தாக்குதல்கள் மூலம் உறுதியான தகவல்களை உருவாக்குதல், ஒருங்கிணைந்த பல்வேறு அமைப்புக்களில் இடையூறு மற்றும் குழப்பம் ஏற்படுத்துதல், போலி செய்திகளை உருவாக்குதல், நிதி சந்தைகளில் மிகப்பெரிய தாக்கம், இராணுவத்தில் ரோபோக்களை தவறாக வழிநடத்துவது, சட்டம் மற்றும் பாதுகாப்பு சேவைகளில் குழப்பம் ஏற்படுத்துதல், தனிநபர் செயல்பாட்டை கண்காணிப்பது, கலை மற்றும் இசைத்துறையில் போலி படைப்பாற்றல் மற்றும் உள்ளடக்கத்தை உருவாக்குதல் போன்றன குறிப்பிடத்தக்கது.

மனிதர்களை போல இந்த தொழில்நுட்பத்தால், ஆக்கபூர்வமான படைப்பாற்றல் இல்லை. கணினிகள் மற்றும் இயந்திரங்களுக்கு உணர்ச்சிகள் இல்லை. எனவே, மனிதர்களை போல ஒரு குழுவாக இணைந்து செயற்பட்டு, ஓர் இலக்கை முடிக்க முடியாது.

**இந்தியாவின் அஸாம் மாநிலதில் உள்ள தனியார் பள்ளி, 'ஐரிஸ்' எனப்படும், ரோபோ ஆசிரியை ஒருவரை அறிமுகம் செய்துள்ளது. இது, குரல் மூலமாக மாணவர்களின் சந்தேகங்களுக்கு விடையளிக்கும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. இத்தனை அளப்பரிய பயன்பாட்டிற்கு, ஏ.ஐ., உதவினாலும், உலகமெங்கும் மனித குலத்துக்கு தீங்கு விளைவிக்கும் ஆபத்தான விளைவுகளும், அன்றாடம் அரங்கேறி வருகின்றன.**

மனிதனிடம் உள்ள நெறிமுறை மற்றும் அறநெறி ஆகியவற்றை, ஏ.ஐ., உடன் இணைப்பது எளிதல்ல. எனவே, இது வரவிருக்கும் சகாப்தங்களாக தொடர்ந்தால், ஏ.ஐ., இறுதியில் மனித குலத்தையே அழித்துவிடும்.

# சிரியாவை விட்டு தப்பியோடிய அதிபர்

சிரியாவில் பஷார் அல் ஆசாத் ஆட்சி வீழ்த்தப்பட்டு கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து பஷார் அல் ஆசாத் சிரியாவில் இருந்து விமானம் மூலம் தப்பியோடி, ரஷியாவில் தஞ்சம் புகுந்துள்ளார். ஆசாத் ஆட்சி முடிவுக்கு வந்ததை அடுத்து சிரியமக்கள் தெருக்களில் இறங்கி கொண்டாடி தீர்த்து வருகின்றனர்.

இந்த நிலையில், ஆசாத் தப்பியோடியதைத் தொடர்ந்து சிரியாவில் உள்ள ஐஎஸ்ஐஎஸ் பயங்கரவாத அமைப்புகளை குறிவைத்து அமெரிக்கா பயங்கர தாக்குதல்களை நடத்தியது.

சிரியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் அவசர நிலை குறித்து அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கூறியுள்ளதாவது , சிரியாவில் நிலவும் வெற்றிடத்தை பயன்படுத்திக் கொள்ள ஐஎஸ்ஐஎஸ் குழு தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கலாம் என்று எச்சரிக்கை விடுத்தார்.

இத்தகைய அசம்பாவிதங்களை தவிர்க்கும் நோக்கில் அமெரிக்க படைகள் ஐஎஸ்ஐஎஸ்-ஐ குறி வைத்து கடும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 75 இலக்குகளை குறிவைத்து தாக்கிய அமெரிக்க படைகள் பி-52, எஃப்-15 மற்றும் ஏ-10 ரக விமானங்களை பயன்படுத்தியதாக தெரிவித்துள்ளது.

## ஐ-எஸ்-ஐ-எஸ் ஐ குறிவைக்கும் அமெரிக்க படைகள்!





## மாஸ்கோவில் தஞ்சம் புகுந்த ஆசாத் ரஷ்ய ஊடகம் வெளியிட்ட தகவல்!

சிரியா நாட்டில் 2011-ம் ஆண்டு முதல் உள்நாட்டு போர் நடந்து வருகிறது.

இந்நிலையில் ஆசாத் தலைமையிலான அரசுக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் போரில் ஈடுபட்டு வருகின்றனர். சில ஆண்டாக வன்முறை எதுவும் ஏற்படாத நிலையில், கடந்த வாரம் மீண்டும் கிளர்ச்சி வெடித்தது.

சிரியாவில் உள்ள அலெப்போ மற்றும் ஹமாஸ் பகுதிகளைக் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியதையடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் அங்கிருந்து தப்பியோடினர்.

இதற்கிடையே, தலைநகர் டமாஸ்கஸ் நேற்று கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. ஆசாத்துக்கு ஆதரவாக செயல்படும் ரஷியாவின் கடற்படை விமான தளங்கள் அமைத்துள்ள கடலோர பகுதிகளுடன் டமாஸ்கஸ் தொடர்பைக் கிளர்ச்சியாளர்கள் துண்டித்துள்ளனர். இதேவேளை அதிபர் ஆசாத் நாட்டை விட்டு விமானம் மூலம் தப்பியோடியதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

சிரியாவில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், அங்கிருந்து தப்பியோடிய ஆசாத் மற்றும் அவரது குடும்பத்தினர் ரஷ்யாவில் தஞ்சம் புகுந்துள்ளனர் என கிரெம்ளின் மாளிகை வட்டாரம் தெரிவிக்கின்றது.

இதுதொடர்பாக ரஷ்ய செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியில், ஆசாத் மற்றும் அவரது குடும்பத்தினர் மாஸ்கோ வந்துள்ளனர். மனிதாபிமான அடிப்படையில் ரஷ்யா அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளது. சிரியாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு அரசியல் ரீதியாக தீர்வு காண வேண்டும் என எப்போதும் ரஷ்யா கூறி வருகிறது. இதனடிப்படையில் ஐ.நா. மத்தியஸ்தம் செய்யும் பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம் என அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வருங்கால மன்னரை புகழ்ந்த ட்ரம்ப்



பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் பிரித்தானியாவின் வருங்கால மன்னரான இளவரசர் வில்லியமை இரண்டாவது முறையாக சந்தித்த ட்ரம்ப், அவரை மனதார புகழ்ந்துள்ளார்.

பிரான்சின் புகழ்பெற்ற நாட்ரிடாம் தேவாலயத் திறப்பு விழாவுக்காக பாரீஸ் சென்றுள்ள பிரித்தானிய இளவரசர் வில்லியமும், அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ட்ரம்பும் இரண்டாவது முறையாக சந்தித்துக்கொண்டார்கள். அந்த சந்திப்பு, சுமார் 40 நிமிடங்கள் நீடித்தது.

பல்வேறு விடயங்கள் குறித்து இருவரும் பேசிக்கொண்டாலும், அவர்களுடைய உரையாடலில் அமெரிக்க பிரித்தானிய உறவு குறித்த விடயமே முக்கியமாக இடம்பெற்றது.

தன்னுடன் கைகுலுக்கிய வில்லியமுடைய தோளைத்தட்டிக்கொடுத்த ட்ரம்ப், இவர் ஒரு நல்ல மனிதர் என்று கூறியதுடன், வில்லியம் தனது வேலையை அருமையாகச்செய்வதாகவும் தெரிவித்தார்.

மேலும், மறைந்த எலிசபெத் மகாராணியாருடன் அளவளாவியதைக் குறித்த இனிமையான நினைவுகளையும் வில்லியமுடன் ட்ரம்ப் பகிர்ந்துகொண்டதாகவும் கென்சிங்டன் மாளிகை வட்டாரம் தெரிவித்துள்ளது.

## சிரியாவிற்கு ஆதரவுக்கரம் நீட்டத் தயாராகும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு!

சிரியா நாட்டில் 2011-ம் ஆண்டு முதல் உள்நாட்டு போர் நடந்து வருகிறது. ஆசாத் தலைமையிலான அரசுக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் போரில் ஈடுபட்டு வருகின்றனர். சில ஆண்டாக வன்முறை எதுவும் ஏற்படாத நிலையில், கடந்த வாரம் மீண்டும் கிளர்ச்சி வெடித்தது.

சிரியாவில் உள்ள அலெப்போ மற்றும் ஹமாஸ் பகுதிகளைக் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றினர். இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் அங்கிருந்து தப்பியோடினர்.

இதற்கிடையே, தலைநகர் டமாஸ்கஸ் நேற்று கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. ஆசாத்துக்கு ஆதரவாக செயல்படும் ரஷ்யாவின் கடற்படை விமான தளங்கள் அமைத்துள்ள கடலோர பகுதிகளுடன் டமாஸ்கஸ் தொடர்பைக் கிளர்ச்சியாளர்கள் துண்டித்துள்ளனர். அதிபர் ஆசாத் நாட்டை விட்டு விமானம் மூலம் தப்பியோடியதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

இந்நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள வீடியோவில் கூறுகையில்,மத்திய கிழக்கில் ஒரு வரலாற்று நாள். ஆசாத்தின் ஆட்சி, டமாஸ்கஸின் கொடுங்கோல் ஆட்சி சரிந்தது. ஒரு பெரிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ஆனால், பெரிய அளவிலான ஆபத்துகளும் உள்ளன. எங்களுடைய எல்லையைக் கடந்து சிரியாவில் உள்ள அனைவருக்கும் நாங்கள் அமைதிக்கரம் நீட்டுகிறோம். ட்ஷரூஜ், குர்த், கிறிஸ்தவர் மற்றும் முஸ்லிம் என இஸ்ரேலில் அமைதியாக வாழ விரும்பும் அனைவருக்கும் ஆதரவு கரம் நீட்டுகிறோம் என பதிவிட்டுள்ளார்.



## பார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாற்றாக, அரசு வருவாயை அதிகரிக்க, பணம் வசூலிக்கவும், மதுபான நிலைய உரிமம் வழங்கவும் முடிவு செய்யப்பட்டது.

2024 பட்ஜெட் உரையில், மதுவரி நிர்வாக மேம்பாட்டு முறை மற்றும் வரிக் கொள்கைத் திருத்தம், பல்வேறு வகையான மதுபான நிலைய உரிமங்களுக்குப் பொருந்தும் வழிகாட்டுதல்களை நெறிப்படுத்துதல், புதிய விதிமுறைகளை அறிமுகப்படுத்துதல், உரிமங்களைப் பெறுவதற்கான வரம்புகளை நிர்ணயித்தல், நிர்வாகக் கட்டணங்களை வழங்குதல் கோரிக்கைக்கு ஏற்ப உரிய உரிமக் கட்டணத்தை அதிகரிப்பதற்கான முன்மொழிவுகள் அடங்கிய வரவு-செலவுத் திட்ட ஆவணத்தை அப்போதைய நாடாளுமன்றம் நிறைவேற்றியதுடன், அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலுக்கும் நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியது.

அரசியலமைப்பின் பிரிவுகள் 148 முதல் 152 வரை, பொது நிதிக் கட்டுப்பாட்டின் மீது நாடாளுமன்றத்துக்கு முழு அதிகாரம் உள்ளது. இது தவிர, பொது நிதிப் பொறுப்புச் சட்டத்தின் பிரிவு 3, அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியாகவும் செயல்படுகிறது.

மேலும், பொருளாதார மாற்றச் சட்டத்தின் 8 ஆவது பிரிவின் கீழ், அமைச்சர்கள் குழுவின் அதிகாரங்களைப் பயன்படுத்துவதை மேற்பார்வையிட நாடாளுமன்றத்துக்கு உரிமை உண்டு.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் நோக்கில் அமுல்படுத்தப்பட்ட இந்தத் தீர்மானத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில், மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 03ஃ2024 ஆம் இலக்க அறிவிக்கையானது ஏற்கனவே உள்ள கட்டணங்களை அதிகரித்து, புதிய திருத்தங்களை 2024 பெப்ரவரி முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தியுள்ளது.

இவை அனைத்தும் பொருளாதார மேம்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 4 இன் துணைப் பிரிவுகளின் ட மற்றும் எச் இன் படியே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், 2008 ஏப்ரல் 10, திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானி இலக்கம். 1544ஃ17 (மதுவரி அறிவிப்பு எண். 902) மூலம் வெளியிடப்பட்ட விதிமுறைகள் 2024 ஜனவரி 12, திகதியிட்ட வர்த்தமானி இலக்கம் 2366ஃ39 மூலம் திருத்தப்பட்டன. அவை அனைத்தும் நாடாளுமன்றத்தின் பொது நிதிக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்படி, மாநகரசபை அதிகார வரம்புகளுக்கு வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அறவிடப்படும் ஷரூபா 15 மில்லியன் ஷரூபாய் கட்டணத்துக்கு மேலதிகமாக, வருடாந்த அனுமதிப் பத்திரக் கட்டணமாக ஷரூபா ஒரு மில்லியனும், ஷரூபா 05 இலட்சம் பாதுகாப்பு வைப்புத் தொகையும்,

நகராட்சி அதிகார வரம்புகளுக்கு வணிகத்தில் நுழைவதற்கு வசூலிக்கப்படும் ஷரூபா 10 மில்லியன் கட்டணத்துடன் கூடுதலாக ஷரூபா 08 லட்சம் வருடாந்த உரிமக் கட்டணம் மற்றும் ஷரூபா 05 லட்சம் பாதுகாப்பு வைப்புத்தொகை,

ஏனைய பகுதிகளுக்கு வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு அறவிடப்படும் ஷரூபா ஒரு மில்லியன் கட்டணத்துக்கு மேலதிகமாக வருடாந்த அனுமதிப்பத்திரம் ஷரூபா 06 இலட்சம் மற்றும் பாதுகாப்பு வைப்புத் தொகை ஷரூபா 05 இலட்சம்,

ஷரூபா ஆயிரம் மில்லியனுக்கும் அதிகமான வணிக வளாகங்கள் அல்லது கடைகளுக்கு, வணிகத்தில் நுழையும்போது வசூலிக்கப்பட்ட ஷரூபா 15 மில்லியனுக்கு மேலதிகமாக, வருடாந்த உரிமக் கட்டணமாக ஷரூபா 1.5 மில்லியனும், ஷரூபா 05 இலட்சம் பாதுகாப்பு வைப்புத் தொகையும் வழங்கப்பட்டன. மதுபானங்களின் சில்லறை விற்பனை வெளியிடப்பட்டது.

2024 பெப்ரவரி 1, முதல் 2024அக்டோபர் 31, வரை, புதிய திருத்தத்தின் படி, 172 மதுபானக் கடைகள் மற்றும் 89 மால்கள் அல்லது கடைகளுக்கு ஷரூபா ஆயிரம் மில்லியனுக்கும் அதிகமாக மதுபானங்களை விற்பனை செய்வதற்கான உரிமத்தின் கீழ் புதிய மதுபான உரிமங்கள் வழங்கப்பட்டன.

இந்த உரிமங்கள் அனைத்தும் மதுவரித் திணைக்களத்தின் விதிகள் மற்றும் விதிமுறைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளின்படி வழங்கப்பட்டுள்ளன. உரிமம் வழங்கும் போது, மதுவரி ஆணையர் நாயகம் பரிந்துரைத்த விண்ணப்பங்களுக்கு மட்டுமே உரிமம் வழங்கப்பட்டது. அந்த அமைப்புக்கு வெளியே ஒரு மதுபான நிலைய உரிமம் கூட வழங்கப்படவில்லை.

இந்த ஒன்பது மாதங்களில் அரசாங்கத்தால் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் ருபா 3.1 பில்லியன் ஆகும்.

2024 ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் இந்த முறை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டால், 2024 ஆம் ஆண்டில் அரசாங்கம் ஷரூபா 04 பில்லியனுக்கும் அதிகமான வருமானத்தைப் பெற்றிருக்க முடியும்.

வங்குரோத்து நிலையில் உள்ள பொருளாதாரத்தை மீட்பதற்காக நீண்ட கால நோக்குடன் செயற்படுத்தப்பட்ட இந்த மதுபான நிலைய உரிமம் வழங்கும் நடைமுறை குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக தவறாக பயன்படுத்தப்படுவது வருத்தமளிக்கிறது என்றும்,

தற்போதைய செயல்பாடு வெளிப்படையானது மற்றும் நெறிப்படுத்தப்பட்டுள்ளது. புதிய வருமான வழியை இரத்து செய்வதா, இல்லையா என்பது தொடர்பில், அவ்வாறு இல்லையேல் புதிய மதுவரிச் சட்டத்தை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பது தொடர்பில் நாடாளுமன்ற அனுமதியுடன் அமைச்சரவை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-09)




# 13 நாள்களின் பின்னர் காரைதீவுக்கு குடிநீர்!

( வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், காரைதீவுக்கு 13 நாள்களின் பின்னர் குழாய் வழியான குடிநீர் விநியோகம் இன்று இடம்பெற்றது.

அண்மையில் நிலவிய சீரற்ற லநிலை மற்றும் வெள்ள இடர் காரணமாகப் பிரதான குளாய்கள் உடைந்ததன் ரணமாகத் தடைப்பட்டிருந்த குடிநீர் விநியோகம் இன்று வழமைக்கு திரும்பியுள்ளது.

குழாய்களில் தண்ணீர் சீறிப் பாய்ந்து வந்ததும் மக்கள் அளவிலா மகிழ்ச்சி அடைந்தனர். பெரு வெள்ளத்தினால் நயினாகாட்டுப் பகுதியில் உடைத்தெறியப்பட்ட பிரதான நீர்க் குழாய் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினரால் இரவு பகலாக திருத்தம் செய்யப்பட்டு வந்தது.

கடந்த சனிக்கிழமை குழாய் பொருத்தும் பணிகள் முடிவடைந்த போதிலும், நீரின் தரப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, தர உத்தரவாதம் வழங்கப்பட்ட பின்னரே இன்று காலை முதல் பொதுமக்களுக்கு நீர் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ஐ)

## தவறுகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்தலை இரத்துச் செய்வதாக அரசாங்கம் அறிவித்ததனால், உத்தேச மதிப்பீட்டின் பத்து சதவிகிதம் தேவையற்ற விதத்தில் செலவிடப்பட்டுள்ளது. அதன் மதிப்பீடு ஷரூபா 720 மில்லியன்களாகும்.

அரசாங்கத்தின் இந்தச் செயற்பாடானது வெறுமனே மக்களின் ஜனநாயக உரிமையை மட்டும் மீறி விடவில்லை. மக்களின் மீது தேவையற்ற நிதிச் சுமையையும் சுமத்தியுள்ளது.

இவ்வாறு வீண் விரயமாகும் நிதியைப் பொது மக்களின் கல்வி மற்றும் சுகாதார சேவைகள் போன்ற அத்தியாவசிய சேவைகளுக்குப் பயன்படுத்தியிருக்கலாம்.

அதேநேரம், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான முன்னைய அரசாங்கத்தில் ஊழல் மற்றும் இலஞ்ச லாவண்யங்கள் உட்பட நிர்வாகச் சீர்கேடுகள் இடம்பெற்றுள்ளன என்று சுட்டிக்காட்டியுள்ள டலஸ் அழகப்பெரும, “இந்தப் பொருளாதாரத் தவறு செய்பவர்களுக்கு எதிராகத் தற்போதைய ஜனாதிபதியும், அரசாங்கமும் எடுக்கும் நடவடிக்கைகளுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்” என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ-05)

## காற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம், பொலன்னறுவை ஆகிய நகரங்களில் காற்றின் தர சுட்டெண் ஆரோக்கியமற்ற மட்டத்தில் உள்ளதுடன், நாட்டின் பல பகுதிகளில் காற்றின் தர சுட்டெண் சற்று ஆரோக்கியமற்ற மட்டத்திற்கு அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, களுத்துறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய நகரங்களில் மாத்திரம் இன்றைய தினம் காற்று தரச்சுட்டெண் மத்திம மட்டத்தில் உள்ளது எனத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் சுற்றுச்சூழல் ஆய்வு பிரிவு மேலும் அறிவித்துள்ளது.

இதேநேரம், காற்றின் தரச்சுட்டென் ஆரோக்கியமாற்ற மாவட்டங்களில் வதியும், சுவாச ரீதியான பாதிப்புடையவர்கள் வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ஐ-07)

# மலக்குழியில் விழுந்த குடும்பஸ்தர் மரணம்!

சாய்ந்தமருது, டிச. 09

கடை ஒன்றின் கட்டுமான வேலை தளத்தில் இடம்பெற்ற அனர்த்தம் ஒன்றில் மரணமடைந்த இளம் குடும்பஸ்தரின் சடலம், மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதான வீதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கடைத் தொகுதியில் வேலையில் ஈடுபட்டவர்கள் சிக்கிக் கொண்ட அனர்த்தம் ஒன்றில், இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்ததுடன் மற்றுமொருவர் காயங்களுடன் மீட்கப்பட்டு கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை சம்பவ இடத்துக்கு வருகை தந்த கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் அப்துல் ரசீட் முஹம்மது கலீல் சடலத்தை பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டதுடன் பின்னர், உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டு சட்ட வைத்திய அதிகாரியின் மரண விசாரணை நடவடிக்கையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தில் 12 நாள் ஆண் குழந்தை ஒன்றின் தந்தையான சாய்ந்தமருது பிரிவு 16 அஹமட் வீதியை சேர்ந்த 29 வயதான அப்துல் மஜீட் மஹ்தி அஹாஸ் அஹமட் என்பவரே மரணமடைந்தவராவார். (ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.12.2024இல் வெளியிடப்பெற்றது.